ஜோலார்பேட்டை நகராட்சி
சாதாரண கூட்டம்

2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ஆம் தேதி (**22.08.2022**) திங்கள் கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலக நகரமன்றக் கூடத்தில் நடைபெறும் நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கை.

நகரமன்ற தலைவர்
ஜோலார்பேட்டை நகராட்சி

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"
(அன்பு இல்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார்
அன்பு உடையவர் தம் உடமையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்)

பொருள்கள்

1) **கீழ் குறிப்பிட்ட நகராட்சி அலுவலர்களின் நாட்குறிப்புகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**
அ) ஜோலார்பேட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீலை 2022ம் மாதத்தின்நாட்குறிப்புகள்.
ஆ) ஜோலார்பேட்டை நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை 2022ம் மாதத்தின்நாட்குறிப்புகள்.

2) ஜோலார்பேட்டை நகராட்சியின் ஜீலை-2022 மாதத்திற்கான வரவு செலவு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

Income					
S. No	**Service Name**	**No of Transactions**	**No of Acknowledgement**	**No of Receipts**	**Receipt Amount (Rs)**
A	**B**	**C**	**D**	**E**	**F**
Service Type Name : Application					
Service Category Name : Birth and death					
1	Request for Birth Details Correction	1	0	1	200
2	Request for Child Name Registration	2	0	2	400
3	Request for Death NAC	1	0	1	100
	Service Category wise Total :	**4**	**0**	**4**	**700**
Service Category Name : Non Tax					
4	Property Allotment	2	2	0	0
	Service Category wise Total :	**2**	**2**	**0**	**0**
Service Category Name : Property Tax					
5	Name Transfer of Property	20	20	0	0
6	Vacant Land	13	13	0	0
	Service Category wise Total :	**33**	**33**	**0**	**0**

Service Category Name : Receipts					
7	Payment of Professional Tax	8	0	8	326637
8	Payment of Property Tax	286	0	286	269847
9	Payment of Water Supply	63	0	63	69442
10	Payment of WS Deposit	6	0	6	9374
11	Rental Collection	14	0	14	169036
	Service Category wise Total :	**377**	**0**	**377**	**844336**
Service Category Name : Water Supply					
12	New Connection of Water Supply(Partial Payment)	35	35	0	0
	Service Category wise Total :	**35**	**35**	**0**	**0**
	Service Type wise Total :	**451**	**70**	**381**	**845036**
Service Type Name : Receipt					
Service Category Name : Miscellaneous Receipts					
13	Advance Recovery	1	0	1	1135
14	Amma Unavagam	16	0	16	32613
15	CRS - Late Fee For Death Registration	2	0	2	300
16	Other Income	14	0	14	6600
17	Registration Fees	1	0	1	15500
18	Unapproved Plot Regularisation Fees	2	0	2	86910
	Service Category wise Total :	**36**	**0**	**36**	**143058**
	Service Type wise Total :	**36**	**0**	**36**	**143058**
	Grand Total :	**487**	**70**	**417**	**988094**

Expenditure		
2101001	PAY	1079300
2101002	GRADE PAY	0
2101004	DEARNESS ALLOWANCE	334583
2101005	HOUSE RENT ALLOWANCE	56200
2101006	CITY COMP. ALLOWANCE	0
2101007	MEDICAL ALLOWANCE	12000
2101008	OTHER ALLOWANCE	2500
2102019	CONVEYANCE ALLOWANCE	1800
2102020	WASHING ALLOWANCE	4800
2103005	PENSIONS CONTRIBUTION TO MUNICIPAL EMPLOYEES	626837
ESTABLISHMENT EXPENDITURE		2118020
2201201	TELEPHONE CHARGES	3212
2202101	STATIONERY AND PRINTING	583920
2205202	ENGINEERING CONSULTANCY	8595
2205203	OTHER PROFESSIONAL CHARGES	44500
2208003	OTHER EXPENESE	17000
2208004	SITTING FEES/ HONORARIUM FOR THE COUNCILLORS AND MEETING EXPENSES	10800

2303001	PETROL	8859
2303002	DIESEL	122566
2303003	OIL / LUBRICANTS	23048
2303005	SANITARY MATERIALS	546166
2305007	MAINTENANCE EXPENSES FOR STREET LIGHTS	192166
2308003	REMOVAL OF DEBRIS	1219730
2308009	GARBAGE CLEARANCE	1662236
2308019	AMMA UNAVAGAM	134497
2308021	ANTI FILARIA / ANTI MALARIA OPERATIONS	258120
	Total	**6953435**

ஜீலை மாத மொத்த வரவு – ரூ. 988094/–
ஜீலை மாத மொத்த செலவு – ரூ. 6953435/–

அலுவலக குறிப்பு
மன்றம் பதிவு செய்யலாம்

3) ஜோலார்பேட்டை நகராட்சியில் ஜீலை 2022ஆம் மாதத்தில் பிறப்பு 0 மற்றும் இறப்பு 14 ஆகும்
அலுவலக குறிப்பு
மன்றம் பதிவு செய்யலாம்.

4) ஜோலார்பேட்டை நகராட்சியின் 2021 2022ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
மன்றம் பதிவு செய்யலாம்.
ந.க.எண்.3048/2022/சி1

5) ஜோலார்பேட்டை நகரட்சியில் உள்ள கணினி பிரிவு மற்றும் அனைத்து பிரிவுகளில் தற்பொது UTIS இணையவழியில் மென்பொருள் மூலமாகவே அனைத்து சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் ஏற்கெனவே உள்ள இணையதள வசதி மின்தடை காரணமாக அடிக்கடி துண்டிக்கப்படுகிறது. எனவே, இணையதள சேவைகள் தடையின்றி நடைபெற அனைத்து பிரிவுகளில் உள்ள கணினிகளுக்கு (Railnet) இரயில் நெட் இணைப்பினை (Monish Cable Network) மூலம் இணையதள வசதி ஏற்படுத்த ஒரு வருடத்திற்கு ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.15,000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. இணையதள வசதிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.2921/2022 /இ1

6) ஜோலார்பேட்டை நகராட்சி நகரமன்ற தீர்மான எண்.17 நாள்.25.04.2022ல் நகரமன்ற தலைவர் பயன்பாட்டிற்கு புதியதாக ஈப்பு வாகனம் வாங்கிட ரூ.15.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதலுக்காக 25.04.2022ல் அனுப்பப்பட்டது.

தற்சமயம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.11753/2022/எம்3 நாள்.10.05.2022ல் வரப்பெற்றதின் படி **MAHINDRA & MAHINDRA LTD** நிறுவனத்தின் **ஸ்கார்பியோ** வாகனத்தை **ரூ.16,82,000/**க்கு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரப்பெற்றதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.11753/2022/எம்3 நாள்.10.05.2022ல் நிர்ணயம் செய்யப்பட்ட **MAHINDRA & MAHINDRA LTD** நிறுவனத்தின் **ஸ்கார்பியோ** வாகனம் **ரூ.16,82,000/** க்கு வாங்க மன்றம் அனுமதிக்கலாம். மேலும், இதற்கு உண்டான காப்பீடு மற்றும் ஒப்புதல் வழங்கப்பட்ட செலவினங்களை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் கூடுதல் செலவினத் தொகை **ரூ.1,82,000/** காப்பீடு மற்றும் ஒப்புதல் வழங்கப்பட்ட செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1539/2022/இ1)

7) ஜோலார்பேட்டை நகராட்சி பொறியியல் பிரிவின் அத்தியாவசிய பணிகளான குடிநீர் பணிகள், தெருவிளக்கு பராமரிப்பு பணிகள், தலைமை நீரேற்று நிலை பணிகள் மேற்கொள்வதற்கு நிரந்தர பணியாளர்கள் எவரும் இல்லாத காரணத்தினால் பணியின் அவசியம் கருதி மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பத்தூர் அவர்கள் நிர்ணயம் செய்யப்பட்ட விலைவிகிதத்தின்படி மூன்று மாதகாலத்திற்கு 19 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக்கொள்ளும் பணியினை மேற்கொள்ள

நகரமன்ற தீர்மான எண்.16 நாள்.11.03.2022;ல் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரி திருமதி.எம்.மாலதி, ஒப்பந்ததாரர் அவர்களுக்கு 29.04.2022 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி 31.07.2022 அன்றுடன் முடிவடைகிறது. பணியின் அவசியம் கருதி கூடுதலாக மேலும் 01.08.2022 முதல் மூன்று மாதங்களுக்கு அதே ஒப்பந்ததாரர் மூலம் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 3 மாதங்களுக்கு அதே 01.08.2022 முதல் 3 மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்
3. மேற்படி பணிக்கு கூடுதல் செலவினத் தொகை ரூ.5.80 இலட்சத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1657/2022/இ1

8) ஜோலார்பேட்டை நகரமன்ற தலைவர் பயன்பாட்டிற்கு புதியதாக வாங்கப்பட்ட **MAHINDRA & MAHINDRA LTD** நிறுவனத்தின் **ஸ்கார்பியோ** ஈப்பு வாகனத்தை பதிவு செய்ய தொகை ரூ.2,83,386/ என தெரிவித்து வட்டார போக்குவரத்து அலுவலர், திருப்பத்தூர் அவர்கள் தெரிவித்துள்ளார் மேலும், இதர வரியினங்கள் மற்றும் செலவினங்களுக்கு உண்டான தோரய செலவின தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

9) மாவட்ட ஆட்சித்தலைவர் திருப்பத்தூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.A1/06/2022 நாள்.14.07.2022ன் படி 17.07.2022ஆம் தேதியில் உலக அளவிலான சதுரங்க போட்டிகள் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஜோலார்பேட்டை நகரட்சி பகுதியில் போட்டிகள் நடத்துவதற்கு, காந்தி ரோட்டில் அமைந்துள்ள பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சதுரங்க போட்டி (Chess Olympiad) விழா ஏற்பாடுகள் செய்ய கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 15.07.2022 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ.எண்	பணியின் விவரம்	ஒப்பந்ததாரர் பெயர்	தொகை ரூ.
1	மேடை, பந்தல், ஒலி & ஒளி, நாற்காலி, சதுரங்க போட்டி மேசைகள் மற்றும் இதர அலங்காரப் பணிகள் செய்தல். (வாடகை அடிப்படையில்)	G.பாலாஜி , 43, சி கே சி ரோடு (தாலுக் காவல் நிலையம் அருகில்), திருப்பத்தூர்.	49,500/
2		ADIRAMAI SOUNDS AND SAPLAIYARS, கிருஷ்ணகிரி.	49,800/
3		REVATHI AUDIO, **வாணியம்பாடி.**	50,000/

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. G.பாலாஜி , 43, சி கே சி ரோடு திருப்பத்தூர் ரூ.49500/ க்கு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு, மற்றும் தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>(ந.க.எண்.2107/2022/எச்1(பகுதி1))</u>

10) மாவட்ட ஆட்சித்தலைவர் திருப்பத்தூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.A1/06/2022 நாள்.14.07.2022ன் படி 17.07.2022ஆம் தேதியில் உலக அளவிலான சதுரங்க போட்டிகள் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஜோலார்பேட்டை நகரட்சி பகுதியில் போட்டிகள் நடத்துவதற்கு, காந்தி ரோட்டில் அமைந்துள்ள பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சதுரங்க போட்டி (Chess Olympiad) விழா ஏற்பாடுகள் செய்ய அலங்காரப்பணிகள் மேற்கொள்ள 15.07.2022 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ.எண்	பணியின் விவரம்	ஒப்பந்ததாரர் பெயர்	தொகை ரூ.
1	பேனர்கள், விளம்பர பலகைகள், வீடியோ, புகைப்படங்கள, பரிசுபொருட்கள் மற்றும் இதர அடிப்படை பணிகள் செய்தல்	AU,S.B.Fkunty¦, x¥gªjjhu®, n#hyh®ng£il	49,800/
2		ÄUkÄ,M.khyÄ, x¥gªjjhu®, n#hyh®ng£il	49,750/
3		M/S.A.M.f©[¦l¡rd¦, x¥gªjjhu®, n#hyh®ng£il	50,100/

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி,ஆ.மாலதி, ஒப்பந்ததாரர், ஜோலார்பேட்டை ரூ.49,750/ க்கு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு, மற்றும் தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>(ந.க.எண்.2107/2022/எச்1(பகுதி 2))</u>

11) ஜோலார்பேட்டை நகராட்சியின் 18 நகரமன்ற உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டை (ID CARD) வழங்குவதற்கு உண்டான தோரய செலவின தொகை ரூ.5,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

12) ஜோலார்பேட்டை நகராட்சியில் வார்டு 1 முதல் 18 வார்டுகளில் பருவமழையின் காரணமாக பல பகுதிகளில் நீர் தேங்கி பொதுமக்கள் பாதிக்கும் நிலை உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன்கருதி போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் கிராவல் நிரப்பி சமன் செய்வதற்கு ஆகும் தோராய மதிப்பீட்டு தொகை ரூ.50,000/ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2022/இ1)

13) ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டு 1 முதல் 18 வார்டுகளில் 260 எண்ணிக்கையிலான சிறுமின்விசை பம்புகள் உள்ளன. மேற்காணும் சிறுமின்விசை மோட்டார் பம்புகள் பழுதுகள் ஏற்பட்டால் உடனுக்குடன் சரிசெய்வதற்கு இருப்பில் மின்மோட்டார்கள் இல்லை. எனவே, புதியதாக மின்மோட்டார்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2022-2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண். /2022 /இ1

14) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14409/2022/எப்1 நாள்.05.08.2022 தேதிய கடிதத்தில் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான சாலைகள், கட்டடங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் பலவற்றிற்கு பெயரிடல் மற்றும் பெயர் மாற்றம் செய்துவது குறித்து அரசின் அனுமதி பெற்ற பின்னரே மன்றம் மற்றும் மாமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக (அரசாணை (நிலை) எண்.98 நாள்.11.07.2022) தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான சாலைகள், கட்டடங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் பலவற்றிற்கு பெயரிடல் மற்றும் பெயர் மாற்றம் செய்துவது குறித்து வரப்பெற்ற அரசாணை (அரசாணை (நிலை) எண்.98 நாள்.11.07.2022) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மேற்படி அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.3130/2022/எப்1

15) ஜோலார்பேட்டை நகராட்சி பகுதிகளில் சுகாதார கேடாகவும், போக்குவரத்துக்கு இடையூராகவும் பன்றிகள் சுற்றி திரிவதால் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றுள்ளதன் அடிப்படையிலும் நகராட்சி துப்புரவு ஆய்வர் (பொ) அவர்களின் குறிப்பின்படியும் ஜோலார்பேட்டை நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளிலும் சுற்றிதிரியும் பன்றிகளை உயிருடன் பிடித்து, நகராட்சி எல்லைக்கு வெளியே அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.2426/2022/எச்1

16) ஜோலார்பேட்டை நகராட்சி, பொது சுகாதாரப்பிரிவு, 18 வார்டுகளில் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு ஒரு பெரிய புகை அடிக்கு கருவி மற்றும் 3 சிறிய அளவிலான புகை அடிக்கும் கருவிகள் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அவைகளில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு கொசு ஒழிப்பு பணியில் தொய்வு ஏற்பட்டு வருகிறது. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் டெங்கு மற்றும் கொசுவினால் ஏற்படும் நோய்களை பரவாமல் தடுக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டு என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கூடுதலாக 2 சிறிய அளவிலான புகை அடிக்கும் கருவிகள் Pulse Fogging Machine 2 எண்கள் வாங்க தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.119/2019/எச்1

17) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1023/2022/எச்1 நாள்.24.01.2022 தேதிய கடிதத்தில் 2 வயது குழந்தையை 4 தெரு நாய்கள் கொடுரமாக கடித்து குதறிய நிகழ்வு நடந்தது, தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள தெரு நாய்கள் மூலம் இத்தகைய சம்பவம் இனி வரும் காலங்களில் ஏற்படாவண்ணம், சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.பொதுமக்கள் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் மூலம் தெரு நாய்கள் தொல்லை அதிகமாக உள்ளதாக புகார் மனுக்கள் அளித்துள்ளனர். எனவே, தெரு நாய்கள் சுற்றி திரிவதை பொதுமக்கள் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் புகார்கள் வரப்பெற்றுள்ளதன் அடிப்படையிலும் நகராட்சி துப்புரவு ஆய்வர் (பொ) அவர்களின் குறிப்பின்படியும் ஜோலார்பேட்டை நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளிலும் சுற்றிதிரியும் தெரு நாய்களை உயிருடன் பிடித்து, நகராட்சி எல்லைக்கு வெளியே அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.1,50,000/ மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. நகராட்சி பொது நிதியிலிருந்து பணியினை செய்ய அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2022/எச்1

18) ஜோலார்பேட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு, இந்நகராட்சிக்குட்பட்ட 18 வார்டகளிலும் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள 2022 2023 ஆம் ஆண்டிற்கு தேவையான அத்தியாசிய தளவாடப் பொருட்கள் வாங்கி வழங்க உத்தேச செலவினம் ரூ.7.00 (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.794/2022/எச்1

19) ஜோலார்பேட்டை நகராட்சி, பொது சுகாதாரப்பிரிவு, 18 வார்டுகளிலும் தூய்மை பணியினை நகராட்சி தூய்மை பணியாளர்கள் மூலம் ஒவ்வொரு குடியிருப்பிலும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை என பிரித்து சேகரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு சேகரமாகும் குப்பைகள் அனைத்து குடியிருப்புகளில் இருந்து தினசரி தூய்மை பணியாளர்களை கொண்டு குப்பைகளை சேகரித்து குப்பை கிடங்கிற்கு எடுத்துச்செல்ல குடியிருப்புகளில் குப்பைகள் சேகரிக்கும் குப்பை தொட்டி தேவைப்படுகிறது. ஏற்கெனவே நகராட்சியிடம் 3360 குடியிருப்புகளில் குப்பைகள் சேகரிக்கும் குப்பை தொட்டி கையிருப்பாகஉள்ள நிலையில் கூடுதலாக வழங்கப்படும் 6000 எண்ணிக்கைகள் குப்பைகள் சேகரிக்கும் குப்பை தொட்டி 6000 வாங்க தேராய செலவினம் ரூ.7,50,000 /– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2022/எச்1

20) ஜோலார்பேட்டை நகராட்சிக்கு எதிராக வழக்கு எண்.CRP No.1364/2022 சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு.மைவண்ணகுமார் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.P.அரிஷ் அவர்கள் ஆஜாராகியதற்கு வழக்கு கட்டணம் செலுத்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அரசாணை எண்.1033 நாள்.01.11.2010ன்படி வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணமாக ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகு குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1625/2022/எப்1

21) ஜோலார்பேட்டை நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவு அரசாணை (நிலை) எண் 79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.2) துறை, நாள்: 02.06.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9514/2022/தி.1தூ.இ.தி நாள்.11.05.2022ல் தெரிவித்துள்ளபடி ஒவ்வொரு மாதமும் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகளில் தீவிர தூய்மை பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் (Cleanliness Drive) பொதுமக்கள் பங்கேற்புடன் நடத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சிக்குப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமை நாட்களில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தற்போது கொரானா நோய் தொற்று பரவல் அதிகரித்து வருவதால், மேற்படி தூய்மை பணிகளில் ஈடுபட்டு வரும் தூய்மை பணியாளர்களுக்கு தேவையான கையுறை, முககவசம் மற்றும் கம்பூட்டு தற்போது கையிருப்பு ஏதும் இல்லாததால் கீழ்கண்டபடி பொருட்கள் வாங்க தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ.எண்	பாதுகாப்பு உபகணரங்கள்	அளவு
1	கையுறை	2500 (ஜோடி) எண்ணிக்கை
2	முககவசம்	ஒரு முறை பயன்படுத்தும் முககவசம் 5000 எண்ணிக்கை
3	கம்பூட்டு	12 ஜோடி Size – 10 12 ஜோடி Size – 9

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணிகளுக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.2107/2022/எச்1</u>

22) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9514/2022/தி.1து.இ.தி நாள்.11.05.2022 தேதிய கடிதத்தில் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் தீவிர தூய்மைப் பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம் (Cleanliness Drives) பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், 2022–2023–ஆம் ஆண்டிற்கான நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் (People's Movement of Clean Cites) திட்டத்தின் கீழ் அரசு, தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிர்களிடம் என் குப்பை, என் பொறுப்பு, என் நகரம், என் பெருமை என்ற குறிக்கோளுடன் தங்களின் வீடுகளில் உருவாகும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து தினந்தோறும் காலையில் வரும் நகராட்சி தூய்மை பணியாளர்களிடம் வழங்குவோம் என சான்று அளிக்கிறோம் என்ற படிவம் பள்ளி மாணவ, மாணவிகளிடம் கொடுத்த சான்று பெற்று வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி, தூய்மைக்கான மக்கள் இயக்கம் (People's Movement of Clean Cites) திட்டத்தின் கீழ் பள்ளி மாணவ, மாணவிகளிடம் என் குப்பை, என் பொறுப்பு, என் நகரம், என் பெருமை என படிவம் சான்றாக பெறப்படும் பணிக்கு தோராய செலவினம் ரூ.40,000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும், என் குப்பை, என் பொறுப்பு, என் நகரம், என் பெருமை படிவம் அச்சடித்து வழங்க 25.07.2022 தேதி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	விலைப்புள்ளி வழங்கியவரின் விவரம்	பணியின் விவரம்
		தூய்மைக்கான மக்கள் இயக்கம் (People's Movement of Clean Cites) திட்டத்தின் கீழ் அரசு, தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிர்களிடம் என் குப்பை, என் பொறுப்பு, என் நகரம், என் பெருமை என படிவம் 10000 பிரதிகள் அச்சடிக்க ரூ.
1	திருமலை பிரிண்டர்ஸ், எம்.எம்.எம்.ரெட்டி தெரு, ஜோலார்பேட்டை	ரூ.39,350/–
2	மாருதி பிரிண்டர்ஸ், பார்த்தசாரதி தெரு, ஜோலார்பேட்டை	ரூ.37,850/–
3	திருமகள் பிரிண்டர்ஸ், முனிசாமி நாயுடு தெரு, ஜோலார்பேட்டை	ரூ.38,600/–

அலுவலக குறிப்பு :

1. மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள வ.எண்.2ன் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்காக நகரமன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று பணி முடிக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.2107/2022/எச்1

23) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18933/2022/எச்1 நாள்.05.08.2022 தேதிய கடிதத்தில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO) அவர்களின் கட்டுபாட்டின் கீழ் செயல்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளை பேரூராட்சிகளிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்த்ப்பட்ட நகராட்சிகளில் இனி வரும் காலங்களில் நகராட்சி கட்டுபாட்டின் கீழ் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் 3 ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் 2 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளை இந்நகராட்சி கட்டுபாட்டின் கீழ் கொண்டுவர மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்	நகராட்சி வசம் ஒப்படைக்காட ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி பள்ளியின் பெயர்	பள்ளிகள் அமைந்துள்ள பகுதி
1	ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி (வார்டு எண்.6)	குடியானகுப்பம்
2	ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி (வார்டு எண்.1)	சோலையூர்
3	ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, (வார்டு எண்.17)	வக்கணம்பட்டி
4	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி (வார்டு எண்.5)	ஊசிநாட்டான் வட்டம்
5	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி (தெற்கு) (வார்டு எண்.15)	நாராயணபுரம்

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வட்டார வளர்ச்சி அலுவலர் கட்டுப்பட்டிலிருந்து ஊராட்சி பள்ளி கட்டிடங்களை இந்நகராட்சிக்கு மாற்றம் செய்து தரக் கோரியும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் அவர்களின் அனுமதி கோரலாம்.

ந.க.எண். /2022/எப்1

24) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1 நாள்.16.06.2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1966/2022/அ நாள்.17.06.2022 ஆகியோரின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சிக்குபட்ட பகுதிகளில் வியாபாரம் செய்து வரும் சாலையோர வியாபாரிகளை 2022-2023 ஆம் ஆண்டிற்கு புதியதாக கணக்கெடுப்பு நடத்தவும், அவர்களுக்கு சான்றிதழ் மற்றும் Biometric and QR/Bar Code டன் கூடிய அடையாள அட்டை (Smart Card) வழங்கும் பணிக்கு 04.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப (Technical Bid) தகுதியினை ஆய்வு செய்த ஒப்பந்தக்குழு (Evaluation Committee) M/S.SenseImage Technologies Pvt Ltd., சென்னை, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தேவையான தொழில்நுட்ப தகுதியினை பெற்றுள்ளது. White Ox, K.K.Salai, சென்னை என்ற நிறுவனத்திற்கு தொழில்நுட்ப தகுதி இல்லை. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தக்குழு (Evaluation Committee) மூலம் ஆய்வு செய்து தொழில்நுட்ப தகுதி பெற்ற ஒரே ஒப்பந்ததாரரின் விலை விகிதம் 07.07.2022 அன்று திறக்கப்பட்டு,

வரப்பெற்ற விலைவிகிதம் கீழ்காணும் விவரப்படி மன்றத்தின் அனுமதிக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எ ண்	பணியின் விவரம்	M/s.Senselmage Techlologies Pvt. Ltd.,Chennai
1.	இந்நகராட்சிக்குபட்ட பகுதிகளில் வியாபாரம் செய்து வரும் சாலையோர வியாபாரிகளை 2022-2023 ஆம் ஆண்டிற்கு புதியதாக கணக்கெடுப்பு நடத்தவும், அவர்களுக்கு சான்றிதழ் மற்றும் Biometric and QR/Bar Code டன் கூடிய அடையாள அட்டை (Smart Card) வழங்கும் பணி	ரூ.700/- (Without GST) நபர் ஒன்றுக்கு

அலுவலக குறிப்பு

1. மேற்படி பணிக்கு M/s.Senselmage Techlologies Pvt. Ltd.,Chennai என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்

ந.க.எண்.330/2020/எப்1

25) ஜோலார்பேட்டை நகராட்சியின் ஆணையாளர் மற்றும் நகரமன்ற தலைவர் அவர்களின் அறைக்கு வரும் பொதுமக்கள் அமர்வதற்கான பிளாஸ்டிக் நாற்காலிகள் புதியதாக வாங்குவதற்கான 02.08.2022 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ.எண்	பணியின் விவரம்	ஒப்பந்ததாரர் பெயர்	தொகை ரூ.
1	நகராட்சியின் ஆணையாளர் மற்றும் நகரமன்ற தலைவர் அவர்களின் அறைக்கு வரும் பொதுமக்கள் அமர்வதற்கான பிளாஸ்டிக் நாற்காலிகள் சப்ளை செய்தல் பணி.	திரு,ளு.கூ.குமரவேல், ஒப்பந்ததாரர், ஜோலார்பேட்டை	40,000/
2		திருமதி,ஆ.மாலதி, ஒப்பந்ததாரர், ஜோலார்பேட்டை	39,950/
3		ஆ/ளு.ஹ.ஆ.கண்ஸ்டக்சன், ஒப்பந்ததாரர், ஜோலார்பேட்டை	40,100/

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி,ஆ.மாலதி, ஒப்பந்ததாரர், ஜோலார்பேட்டை ரூ.39,950/ க்கு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். /2022/இ1

26) ஜோலார்பேட்டை நகராட்சியின் ஆணையாளரின் ஈப்பு வாகனம் எண். TN23 BP2497 பழுதடைந்து உள்ளதை **MAHINDRA & MAHINDRA LTD** நிறுவனத்தின் அங்கீகரரம் பெற்ற M/S.ஜெயின் கார்ஸ் ஆட்டோ சேல்ஸ் நிறுவனம் மூலமாக பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் செய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.1,33,822/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2022-2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.1124/2016 /இ1

27) ஜோலார்பேட்டை நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுவரும் மினிலாரி (ஸ்வராஜ் மஸ்தா) TN23AT 1076 வருடந்திர பராமரிப்பு பணிகள் மற்றும் தகுதி சான்று பெற (FC) பழுதுநீக்கம் பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டி உள்ளது. எனவே, வாகன பழுதுநீக்கம் செய்யும் பணிகள், பராமரிப்பு பணிகள் செய்வதற்கு ஆகும் தோராய மதிப்பீடு தொகை ரூ.4.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்/
2. பணியின் அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2022-2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.2380/2022 /எச்1

28) ஜோலார்பேட்டை நகராட்சி, வார்டு எண்.4, பொட்டிகான்பள்ளம் ரோடு, ஜோலார்பேட்டை கிராம சர்வே எண் : 68/2-ல் 2.23 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைபிரிவு அமைக்கப்பட உள்ளதாக தெரிவித்து திருமதி.பொற்கொடி மற்றும் திருமதி.தெய்வானை விஸ்வநாதன் தெரு, திருப்பத்தூர் என்பவர் இணைதளம் மூலம் விண்ணப்பம் செய்துள்ளனர். விண்ணப்ப எண் Online Application No.U7B5OFQN மனு செய்துள்ளனர். மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இணை இயக்குநர்/உதவி இயக்குநர் (முகூபொ), நகர் ஊரமைப்புத்துறை, திருப்பத்தூர் அவர்களின் கடித ந.க.எண்.543/2022 நாள்.08.08.2022 தேதி கடிதத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் மற்றும் பொது உபயோகத்திற்கான இடத்தினை உள்ளாட்சிக்கு தான பத்திரம் மூலம் தானமாக பெறுவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஜோலார்பேட்டை கிராம சர்வே எண் : 68/2-ல் 2.23 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனையிடத்தின் உத்தேச சாலைகள் (Road Pattern) மற்றும் பொது உபயோக (Public Purpose) இடம் ஆகியவற்றை ஜோலார்பேட்டை நகராட்சி ஆணையாளர் பெயரில் பதிவு செய்யப்பட்ட பத்திர ஆவண எண்.2507/2022 நாள்.17.08.2022 அன்று வழங்கப்பட்டுள்ள தான பத்திரம் மற்றும் இணை இயக்குநர்/உதவி இயக்குநர் (முகூபொ), நகர் ஊரமைப்புத்துறை, திருப்பத்தூர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற சாலைகள் அமைப்பு (Road Pattern) மன்றத்தின் பதிவிற்கும், அனுமதிகும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மேற்படி மனுதாரர் நகராட்சி ஆணையாளர் பெயரில் தானமாக வழங்கப்பட்டுள்ள சாலைகளுக்கான தானப் பத்திரத்தை மன்றம் ஏற்கலாம்.
2. இணை இயக்குநர்/உதவி இயக்குநர் (முகூபொ), நகர் ஊரமைப்புத்துறை, திருப்பத்தூர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள சாலைகள் அமைப்புக்கு (Road Pattern) மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.3129/202/எப்1

29) ஜோலார்பேட்டை நகராட்சி யின் நகரமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய வார்டுகளில் அடிப்படை பணிகள் செய்ய விண்ணப்பம் அளித்ததின் பேரில் நேரடி ஆய்வு செய்து மதிப்பீடுகள் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்.	வார்டு எண்.	பணியின் விவரம்	மதிப்பீட்டு தொகை ரூ.
1.	வார்டு –1	இந்நகராட்சியின் வார்டு எண்.1 ராமரெட்டியூர் பகுதியில் சுற்று சுவர் அமைக்கும் பணி.	2.00
2.	வார்டு –2	இந்நகராட்சியின் வார்டு எண்.2 புதூர் பகுதியில் சுற்று சுவர் அமைக்கும் பணி.	2.00
3.	வார்டு –3	இந்நகராட்சியில் வார்டு எண்.3 போயர் காலணி பகுயில் உள்ள சிமெண்ட் சாலைகளில் (Pot hole) பேச் அமைக்கும் பணி	2.00
4.	வார்டு –4	இந்நகராட்சியின் வார்டு எண்.4ல் உள்ள சிறுமின்விசை பம்பு HDPE தொட்டிகள் சப்ளை செய்தல் மற்றும் மேடை அமைக்கும் பணி.	2.00
5.	வார்டு –5	இந்நகராட்சியின் வார்டு எண்.5 தேவராஜ் தெருவில் இன்டர்லாக் பணிகள் மேற்கொள்ளுதல்.	2.00
6.	வார்டு –6	இந்நகராட்சியின் வார்டு எண்.6ல் குடியானகுப்பம் (அண்ணாமலை வட்டம்) புதியதாக பேரூந்து நிறுத்தம் அமைக்கும் பணி.	3.00
7.	வார்டு –7	இந்நகராட்சியின் வார்டு எண்.7 பொட்டிகான் பள்ளத்தில் பேவர்பிளாக் சாலை மற்றும் கால்வாய் அமைக்கும் பணி.	2.20
8.	வார்டு –8	இந்நகராட்சியின் வார்டு எண்.8 காந்திரோடு குறுக்கு தெருவில் கால்வாய் அமைக்கும் பணி.	2.00
9.	வார்டு –10	இந்நகராட்சியின் வார்டு எண்.10 ஊசிநாட்டான் வட்டம் பகுதியில் கழிவுநீர் பைப்லைன் அமைக்கும் பணி.	3.00
10.	வார்டு –11	இந்நகராட்சியின் வார்டு எண்.11 நேதாஜி சாலையில் சுற்றுசுவர் அமைக்கும் பணி.	2.00
11.	வார்டு –12	இந்நகராட்சியின் வார்டு எண்.12 மசூதி பின் தெருவில் கால்வாய் அமைக்கும் பணி.	2.70
12.	வார்டு –13	இந்நகராட்சயில் வார்டு எண்.13ல் சிமெண்ட் சாலையில் பேச் அமைத்தல் மற்றும் கால்வாய் அமைக்கும் பணி.	2.00
13.	வார்டு –14	இந்நகராட்சியின் வார்டு எண்.14 ராஜீவ் காந்தி தெருவில் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி.	10.00
14.	வார்டு –16	இந்நகராட்சின் வார்டு எண்.16 அண்ணா தெருவில் உள்ள பூங்காவில் மேம்பாட்டு பணிகள் செய்தல்.	5.00
15.	வார்டு –17	இந்நகராட்சியின் வார்டு எண்.17 திருப்பத்தூர் மெயின் ரோடு குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலைகளை பழுதுபார்தல் பணி.	4.00

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்கண்ட பணிகளுக்கு அதன் எதிரே உள்ள மதிப்பீடு தொகைக்கு மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21627/2021/எம்3 நாள்.20.09.2021ல் தெரிவித்துள்ளபடி பணிகள் மேற்கொள்ளாலம் அனுமதி கோர மன்றத்தின் ஒப்புதலுக்கு.
3. மேற்படி பணிகளுக்கான செலவினத்தை நிதிநிலைக்கு ஏற்ப வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

30) திரு.பி.கே.மனோகரன், 02–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.

1. நகராட்சி நாட்றம்பள்ளி சாலை துவக்கத்தில் (ஆஞ்சிநேயர் கோயில் அருகில்) மூதறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா நினைவு வளைவு அமைக்க கோருதல்.
2. புதூர் பகுதியில் உள்ள மாயனத்திற்கு சுற்றுசுவர் அமைத்து எரிமேடை அமைக்க கோருதல்.
3. புதூர் பகுதியில் ஒரு துணை 'நூல்நிலையம் அமைக்க கோருதல்.

நகரமன்ற தலைவர்
ஜோலார்பேட்டை நகராட்சி

ஜோலார்பேட்டை நகராட்சி

சாதாரண கூட்டம்

2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22.08.2022ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலக நகரமன்ற கூடத்தில் நடத்தப்பட்ட சாதாரண தீர்மானங்கள்.

வ. எண்	பொருள் எண்	தீர்மான எண்	தீர்மானம்
1	1	77	பதிவு செய்யப்பட்டது.
2	2	78	பதிவு செய்யப்பட்டது.
3	3	79	பதிவு செய்யப்பட்டது.
4	4	80	பதிவு செய்யப்பட்டது.
5	5	81	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
6	6	82	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
7	7	83	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
8	8	84	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
9	9	85	மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.
10	10	86	மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.
11	11	87	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
12	12	88	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
13	13	89	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
14	14	90	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
15	15	91	மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.
16	16	92	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
17	17	93	மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.
18	18	94	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
19	19	95	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
20	20	96	மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.
21	21	97	மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.
22	22	98	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
23	23	99	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
24	24	100	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
25	25	101	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
26	26	102	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
27	27	103	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

28	28	104	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
29	29	105	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
30	30	106	திரு.பி.கே.மனோகரன் 2 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் முன்மொழிய திரு.தேவராஜி நகரமன்ற உறுப்பினர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஓம்) மா.காவியா
நகரமன்ற தலைவர்
ஜோலார்பேட்டை நகராட்சி

/உண்மை நகல்/

நகராட்சி ஆணையாளர்
ஜோலார்பேட்டை நகராட்சி